
இறைத்தூதன்
கத்தோலிக்க வார இதழ்

முன் எப்போதையையும் விட மனிதகுலம் அதிகமாக அமைதிக்காகக் கூக்குரலிட்டு வேண்டி நிற்கின்றது என்றும், இக்கூக்குரலானது பொறுப்பையும் பகுத்தறிவையும் கோரும் ஒரு குரலாக இருக்கின்றது என்றும் கூறினார் திருத்தந்தை 14-ஆம் லியோ.

# அமைதிக்காக அதிகமாகக் கூக்குரல் எழுப்பும் மனிதகுலம்



முன் எப்போதையையும் விட மனிதகுலம் அதிகமாக அமைதிக்காகக் கூக்குரலிட்டு வேண்டி நிற்கின்றது என்றும், இக்கூக்குரலானது பொறுப்பையும் பகுத்தறிவையும் கோரும் ஒரு குரலாக இருக்கின்றது என்றும் கூறினார் திருத்தந்தை 14-ஆம் லியோ.

வத்திக்கான் வளாகத்தில் கூடியிருந்த திருப்பயணிகளுக்கு வழங்கிய ஞாயிறு மூவேளை செப உரையின் இறுதியில் எடுத்துரைத்த உலக அமைதிக்கான செப விண்ணப்பங்களின்போது இவ்வாறு தெரிவித்தார் திருத்தந்தை14-ஆம் லியோ.

ஆயுதங்களின் சத்தம் மற்றும் கடுமையான வார்த்தைகளால் மோதலைத் தூண்டும் செயல் நடைபெறக்கூடாது என்றும், சரிசெய்ய முடியாத பள்ளமாக மாறுவதற்கு முன்னால் போரினால் ஏற்படும் துயரை நிறுத்த பன்னாட்டு சமூகத்தின் உறுப்பினர்கள் ஒவ்வொருவருக்கும் கடமை உள்ளது என்று எடுத்துரைத்தார் திருத்தந்தை.

மனித மாண்பு ஆபத்தில் இருக்கும்போது தொலைநர மோதல்கள் என்று எதுவும் இல்லை என சுட்டிக்காட்டிய திருத்தந்தை அவர்கள், போர் பிரச்சினைகளைத் தீர்க்காது, மாறாக, அது அவற்றைப் பெருக்கி, மக்களின் வரலாற்றில் ஆழமான காயங்களை உருவாக்குகிறது என்றும் கூறினார்.

போரினால் ஏற்படும் வலிகளை, காயங்களைக் குணமாக்க பல தலைமுறைகள் தேவைப்படும் என்றும், அன்னையர்களின் துயரம், குழந்தைகள் மீதான பயம், திருடப்பட்ட எதிர்காலம் போன்றவற்றை எந்த ஒரு போரின் வெற்றியும் ஈடுசெய்ய முடியாது என்றும் கூறினார் திருத்தந்தை 14-ஆம் லியோ.

அரசியல் செயல்பாடுகள் ஆயுதங்களை அமைதியாக்கட்டும், நாடுகள் தங்களது எதிர்காலத்தை வன்முறை மற்றும் இரத்தச்சுவடுகள் நிறைந்த போரினால் அல்ல, மாறாக அமைதியின் செயல்களால் கண்டறியட்டும் என்று வலியுறுத்திய திருத்தந்தை அவர்கள், நிர்வாகத்தினருக்கான யூபிலியை முன்னிட்டு வத்திக்கானிற்கு வருகை தந்திருக்கும் அனைத்து அரசியல் தலைவர்கள் மற்றும் பிரதிநிதிகளை வாழ்த்தினார்.

மத்திய கிழக்கில், குறிப்பாக ஈரான், இஸ்ரேல், காசா மற்றும் பாலஸ்தீனம் உள்ளிட்ட போரினால் பாதிக்கப்பட்ட அனைத்து நாடுகளையும் மக்களையும் நினைவுகூர்ந்த திருத்தந்தை அவர்கள், பாதிக்கப்பட்ட இடங்களில் போதுமான மனிதாபிமான உதவிகளின் அவசரம் மேலும் மேலும் அழுத்தமாகி வருகிறது என்றும் எடுத்துரைத்தார்.

மெரினா ராஜ் - வத்திக்கான்

# பயிற்சி மாணவர்கள் நம்பிக்கையின் சான்றுகளாக உள்ளார்கள்



குருத்துவப் பயிற்சிப் பெற்றுவரும் மாணவர்கள் தங்கள் செயல் திறன் வழி எதிர்நோக்கு என்னும் சுடரை அணையாமல் காத்து வருகிறார்கள் என்றார் திருத்தந்தை 14ஆம் லியோ.

அருள்பணித்துவ வாழ்வுக்கென தயாரித்துவரும் ஏறக்குறைய 4000 குருத்துவ மாணவர்களை யூபிலி ஆண்டுக் கொண்டாட்டங்களையொட்டி வத்திக்கான் புனித பேதுரு பெருங்கோவிலில் சந்தித்த திருத்தந்தை 14ஆம் லியோ அவர்கள், வெளியிடங்களுக்குச் சென்று பணிபுரியும் மறைபணித்திருஅவையின் சேவகர்களாகவும், மீட்கும் இறைவார்த்தையை அறிவிப்பவர்களாகவும் பயிற்சி பெறும் குருத்துவ மாணவர்கள் திருப்பயணிகளாக மட்டுமல்ல, நம்பிக்கையின் சான்றுகளாகச் செயல்படுகிறரர்கள் என அவர்களிடம் உரைத்தார்.

இறைவனின் அழைப்புக்கு தாழ்ச்சியுடனும் மனவுறுதியுடனும் குருத்துவ பயிற்சி மாணவர்கள், ‘ஆம்’ சொல்லும்போது திருஅவையின் வாழ்வுக்குள் முளைவிட்டு வளர உதவுகின்றார்கள் என்ற திருத்தந்தை, இயேசுவே முதலில் அவர்களை அழைத்து, அவருடனும் தங்கள் உடன் சகோதரர்களுடனும் நட்புணர்வு அனுபவத்தில் தொடர அழைப்புவிடுக்கிறார் என உரைத்தார்.

மண்ணில் மடிந்து மிகுந்த பலன் கொடுக்கும் கோதுமை மணி குறித்த கருத்தை முன்வைத்த திருத்தந்தை 14ஆம் லியோ அவர்கள், கிறிஸ்துவுடனும் உங்களை நாடிவருவோருடனும் சந்திப்பை மேற்கொள்வதில் எவ்வித தடையையும் மேற்கொள்ளாமல் பாலங்களாகச் செயல்பட வேண்டும் என கேட்டுக் கொண்டார்.

இயேசு கிறிஸ்து எவ்வாறு ஒரு மனித இதயம் கொண்டவராக அன்பு கூர்ந்தாரோ, அதேபோல் நாம் கிறிஸ்துவின் இதயத்தோடு அன்புகூர அழைக்கப்பட்டிருக்கின்றோம் என்ற விண்ணப்பத்தையும் விடுத்தார் திருத்தந்தை.

நம் உள்மன வாழ்வுக்கு, அதாவது இதயத்திற்கு திரும்ப வேண்டும் என்ற புனித அகுஸ்தினாரின் வார்த்தைகளையும் மேற்கோள் காட்டிய திருத்தந்தை 14ஆம் லியோ அவர்கள், இதயத்தின் உணர்வுகளே நம் வாழ்வின் பாதையைக் கண்டுகொள்ள உதவுகின்றன, அதன் வழியாகவே நாம் உண்மையுள்ளவர்களாக மாறுவதோடு, முகமூடி அணியா ஒரு நிலைக்கும் எடுத்துச்செல்லப்படுகிறோம் என கூறினார்.

அடிக்கடி தூய ஆவியாரை நம் துணைக்கு அழைப்பதையும், இயற்கை, கலை, கவிதை, இலக்கியம், இசை மற்றும் மனித நேயத்திற்கு செவிமடுப்பதையும் கைவசம் கொள்ளுங்கள் என குருத்துவப்பயிற்சி மாணவர்களுக்கு அழைப்புவிடுத்தார் திருத்தந்தை.

இறையியல் படிப்பில் நீங்கள் ஆழ்ந்த கவனம் செலுத்தி வந்தாலும், சமூகத்தொடர்பு சாதனங்கள், செயற்கை நுண்ணறிவு போன்றவை தரும் அண்மை சவால்கள் போன்ற கலாச்சார குரல்களுக்கு இதயங்களையும் மனதையும் திறந்தவர்களாகச் செயல்படுங்கள் என்ற அழைப்பையும் முன்வைத்த திருத்தந்தை 14ஆம் லியோ அவர்கள், எல்லாவற்றிற்கும் மேலாக இயேசுவைப்போல், மிகச்சிறியோர், ஏழைகள் மற்றும் ஒடுக்கப்பட்டோரின் குரலுக்கு செவிமடுக்க ஒருநாளும் மறவாதீர்கள் எனவும் அழைப்பு விடுத்தார்.

வாழ்வில் தியானம், ஜெபம், மௌனம் ஆகியவைகளின் முக்கியத்துவம் பற்றியும் எடுத்துரைத்து, நம் பாதை என்ன, கடவுள் நம்மை எதை நோக்கி வழி நடத்துகிறர் என்பதை உணர்ந்துகொள்ள இவை உதவும் எனவும் எடுத்துரைத்தார் திருத்தந்தை 14ஆம் லியோ.

கிறிஸ்டோபர் பிரான்சிஸ் – வத்திக்கான்

# மலேசிய மறைக்கல்வி ஆணையத்தின் (MCC) 2024 ஆண்டு மாநாடு

கூச்சிங், சரவாக்: மலேசிய மறைக்கல்வி ஆணையம் (MCC) தனது ஆண்டு கூட்டத்தை ஜூன் 9 முதல் 13 வரை நடத்தியது. இந்தக் கூட்டத்தில் ஒன்பது மறைமாவட்டங்களிலிருந்தும் அருட்பணியாளர்கள், துறவறத்தார், பொதுநிலைப் பிரதிநிதிகள், ஆகியோருடன் சிங்கப்பூர், புரூணை நாடுகளிலிருந்து பார்வையாளர்களும் கலந்து கொண்டனர். சிபு ஆயரும் MCC-யின் தலைமை ஆயருமான ஜோசப் ஹீ தலைமையில் இக்கூட்டம் நடைப்பெற்றது. முனைவர் ஸ்டீவன் செல்வராஜு இக்கூட்டத்தின் தலைவராகப் பணியாற்றினார்.

தனது முக்கிய உரையில், ஆயர் ஜோசப் திருஅவை எவ்வாறு அருட்பணியாளராக, இறைவாக்கினராக அரசராக கிறிஸ்துவின் பணியைத் தனது வழிபாடு, மறைக்கல்விஆகிய பணிகளின் மூலமாகத் தொடர்கிறது என்பதைப் பற்றிப் விவரித்தார். மதச்சார்பின்மை, தொழில்நுட்ப மாற்றங்கள், சுற்றுச்சூழல் கவலைகள் போன்ற நவீன சவால்களுக்குப் பதிலளிக்கும் அதே வேளையில், திருத்னதர்களின் விசுவாசத்தைப் பின்பற்றி மறைக்கல்வியின் சாராம்சத்திற்கு உண்மையாக இருக்க வேண்டும் என்று பங்கேற்பாளர்களை அவர் வலியுறுத்திக் கேட்டுக் கொண்டார். சிங்கப்பூருடனும் புரூணையுடனும் ஆழமான பிராந்திய ஒத்துழைப்புக்கான தனது விருப்பத்தையும் அவர் வெளிப்படுத்தினார்.

அதிகரித்து வரும் மதக் கட்டுப்பாடுகள், மதச்சார்பற்ற அழுத்தங்களின் கீழ் மறைக்கல்வி கற்பிக்கும் யதார்த்தங்களை பிரதிநிதிகள் பகிர்ந்துக் கொண்டனர். வளங்களிலும் உள்ளூர்





சூழல்களிலும் வேறுபாடுகள் இருந்தபோதிலும், பலர் ஒருவருக்கொருவர் விடாமுயற்சியினாலும், படைப்பாற்றலினாலும் ஊக்கமடைந்தனர். குறிப்பாக அதிக கட்டுப்பாடுகள் உள்ள பகுதிகளில் பரஸ்பர ஆதரவோடு உருவாக்கம் தேவை என்பது பரவலாக உறுதிப்படுத்தப்பட்டது.

மலேசிய மறைக்கல்வித் தொடர் (MCS), 5 புதிய படிவத்தின் உள்ளடக்கம், RCIA புகுமுக ஆயத்த கிறிஸ்துவ வகுப்புகளுக்கான தேவையான உபகரணங்கள், கத்தோலிக்கர் அல்லாத திருமுழுக்குப் பெற்றவர்களுக்கான ஆன்மீகப் பராமரிப்பு உட்பட பல தேசிய சிக்கல்கள் குறித்தும் விவாதிக்கப்பட்டன. கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் வரவிருக்கும் கத்தோலிக்க ஆயர்கள் மாநாட்டில் சமர்ப்பிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

மறைக்கல்வி ஞாயிறு குறித்தும் ஆணையம் விவாதித்தது. இது தற்போது ஆகஸ்ட் மாதத்தின் முதல் ஞாயிற்றுக்கிழமை கொண்டாடப்படுகிறது. 2026 ஆம் ஆண்டிற்கான கருப்பொருள் "பிறருக்கு கிறிஸ்துவாக இருங்கள்" (மத்தேயு 25:40) என்பதாகும். இது மறைபோதகர்கள் மட்டுமல்ல, அனைத்து விசுவாசிகளும் அன்றாட வாழ்க்கையில் விசுவாசத்தை தீவிரமாகப் பகிர்ந்து கொள்ளவும் வாழவும் வேண்டும் என்ற அழைப்பைப் பிரதிபலிக்கிறது.

கூட்டத்திற்கு வெளியே, பிரதிநிதிகள் சரவாக் மாநிலத்தின் கலை கலாச்சாரச் செழுமையைப் பற்றி அறிந்தார்கள். ‘படுங்கான்’-யில் உள்ள புதிய புனித பேதுரு தேவாலயத்தையும் ‘செரியான்’-யில் உள்ள புனித தெரேசா பங்கு தேவாலயத்தையும் பார்வையிட்டனர். இந்த வருகைகள் உள்ளூர் திருஅவையின் கலைகலாச்சார ஒருங்கிணைப்பின் அழகையும், துடிப்பான விசுவாசத்தையும் எடுத்துக்காட்டின.

தனது நிறைவுரையில், ஆயர் ஜோசப், கூச்சிங் மாமறைமாவட்டத்தின் அன்பான விருந்தோம்பலுக்கு நன்றி தெரிவித்தார். மற்றவர்கள் கிறிஸ்துவைச் சந்திக்க உதவுவதில் மறைபோதகர்களின் முக்கிய பங்கை அவர் மீண்டும் உறுதிப்படுத்தினார். அடுத்த MCC கூட்டம் 2026 இல் கோலாலம்பூர் மாமறைமாவட்டத்தால் நடத்தப்படும் என்றும் அவர் அறிவித்தார்.

# கிள்ளான் லூர்து அன்னை பங்கின் விவிலிய ஒன்றுக்கூடல் நிகழ்ச்சி



அண்மையில், கிள்ளான் லூர்து அன்னை பங்கில் நடைபெற்ற விவிலிய ஒன்றுக்கூடல் நிகழ்ச்சி, விசுவாச வாழ்வில் ஆழப்பட விரும்பும் அனைவருக்கும் ஒரு சிறந்த வாய்ப்பாக அமைந்தது. லூர்து அன்னை விவிலியப் பணிக்குழு பொறுப்பாளர்களால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த நிகழ்வில், விவிலிய வகுப்பில் நீண்டகாலமாகப் பயின்றவர்களும், விவிலியத்தைப் பற்றி அறிய ஆர்வமுள்ளவர்களும் ஆர்வத்துடன் கலந்துகொண்டனர்.

இந்நிகழ்வின் சிறப்பம்சமாக, சகோதரி தெரசா தாஸ், திருவிவிலியத்தின் பழைய ஏற்பாடு முதல் புதிய ஏற்பாடு வரையிலான நிகழ்வுகளை ஒரு சுருக்கமாகவும் ஆழமான கண்ணோட்டத்துடனும் வழங்கினார். விவிலியம் என்பது மீட்கப்படும் மனிதனையும், மீட்பராகிய இயேசு கிறிஸ்துவையும் பற்றியது என்பதை அவர் தெளிவுப்படுத்தினார். கடவுளால் மீட்கப்பட்ட மனிதர்கள் வெற்றிபெறும்போது அது நமக்கு ஒரு முன்னோடியாகவும், தோல்வியடையும்போது ஒரு பாடமாகவும் அமையும் என்பதை அவர் எடுத்துரைத்தார். மேலும், மீட்பராகிய இயேசு எவ்வாறு நம்மை மீட்பதற்காக வந்து, நமக்காகத் தம்மை ஒப்புக்கொடுத்தார் என்பதையும் விளக்கினார்.

மனிதன் பாவத்தில் விழுந்தபோது, கடவுள் தொடக்க நூல் 3:15-ல் குறிப்பிட்டபடி, மனிதனை மீட்பதற்கான தமது திட்டத்தை தொடங்கினார். ஒவ்வொரு காலகட்டத்திலும் ஒவ்வொரு மனிதரைத் தேர்ந்தெடுத்து, இறுதியாகத் தமது மீட்புத் திட்டத்தின் முக்கிய இணைப்பாளராக அன்னை மரியாவையும் கடவுள் தேர்ந்தெடுத்தார் என்பதை அவர் சுட்டிக்காட்டினார். இதன் பின்னர், இயேசு இவ்வுலகிற்கு இறங்கி வந்து, பாடுகள், மரணம், உயிர்ப்பு வழியிலும், தூய ஆவியின் வருகையாலும் புதிய திருஅவையை நிறுவினார். பேதுருவும் மற்றும் பவுலும் நற்செய்தி பணிக்காக எவ்வாறு கடினமாக உழைத்தனர் என்பதையும் சகோதரி தெரசா தாஸ் விரிவாகப் எடுத்துரைத்தார். பழைய ஏற்பாட்டின் சில நிகழ்வுகள் எவ்வாறு புதிய ஏற்பாட்டில் தெளிவாகக் காணப்படுகின்றன என்பதை வெளி அடையாளங்களாகக் குறிப்பிட்டு, பல எடுத்துக்காட்டுகளுடன் தனது உரையை நிறைவு செய்தார்.

நிகழ்வின் நிறைவில், பங்கின் துணை அருள்பணியாளர் செல்வா, நமது அன்றாட வாழ்வில் விவிலியம் ஒரு முக்கியமான பகுதியாக இருக்க வேண்டும் என்றும், அதைத் தினமும் வாசிப்பதன் அவசியத்தையும் வலியுறுத்தினார். நமது மீட்புக்கான திட்டங்களும், கடவுளின் மறையுண்மைகளும் விவிலியத்தில்தான் அடங்கியுள்ளன என்று அவர் கூறினார்.

கிறிஸ்தவர்களாகிய நாம் முழு நம்பிக்கையுடன் வாழக் கற்றுக்கொள்ள, விவிலியத்தை ஆழமாகவும், தீவிரமாகவும் படிக்க வேண்டும் என்ற அழைப்பு முன்வைக்கப்பட்டது. அடுத்த கட்ட விவிலிய வகுப்பில் அனைவரும் கலந்துகொள்ள வேண்டும் என்றும் கேட்டுக்கொள்ளப்பட்டது. இந்த பயனுள்ள நிகழ்வை சிறப்பாக ஏற்பாடு செய்த லூர்து அன்னை விவிலியக் குழுவுக்கு நன்றி தெரிவிக்கப்பட்டது.

தெரசா தாஸ் - கிள்ளான் லூர்து அன்னை

# மந்தின், புனித அலோசியஸ் தேவாலயத்தின் 125 ஆண்டுகால விசுவாசக் கொண்டாட்டம்





கடந்த வாரம் மந்தின் புனித அலோசியஸ் தேவாலயத்தின் மணியின் சத்தம் மந்தின் வட்டாரத்தின் எல்லைகளைத் தாண்டி முழங்கியது. தேவாலயம் நிர்மாணிக்கப்பட்டு 125 ஆண்டுகள் கடந்துவிட்டதை நினைவூட்டும் வகையில் அச்சத்தம் அமைந்திருந்தது. பணிவாழ்வு, ஒற்றுமை, நம்பிக்கை ஆகியவற்றின் வெற்றிக்கொடியை உயர்த்திடும் அழைப்பாக அமைந்திருந்தது குறிப்பிடத்தக்கது.

கடந்த 1899-ஆம் ஆண்டில் – அருட்பணியாளர் ‘ஆண்டன் காடெசன்’ (MEP) அவர்களால் அடித்தளமிடப்பட்ட இந்த தேவாலயம் இன்று ஓர் உயிரோட்டமிக்க இறைமக்களை உள்ளடக்கிய இடமாக அமைந்துள்ளது.

“எதிர்நோக்கின் திருப்பயணம் என்ற கருப்பொருளில்: குடும்பம், வலியல், திருஅவை, சமூகத்தை மதித்து வாழ்தல்” என்ற தலைப்பில் கொண்டாடப்பட்ட இந்த ஐந்து நாள் திருவிழா, கத்தோலிக்கர்கள் பலரை செபம், சிந்தனை, உற்சாகம், செயல்பாடு என நான்கு கோணங்களில் சிந்திக்கவும் தியானிக்கவும் இணைத்தது.

கடந்த ஜூன் 18 ஆம் நாள், – ‘புனித அலோய்சியஸ்யோடு குணமாகுதல்’ என்ற தலைப்பில் பங்குத்தந்தை அருட்பணியாளர் கிறிஸ் அவர்களால் திருப்பலியுடன் நோயாளிகளுக்கான குணமளிப்பு சடங்கோடு திருவிழா ஆரம்பமானது.

ஜூன் 19 ஆம் நாள் – குடும்பம் என்ற தலைப்பில். அருட்பணியாளர் சின் வீ OCD, அருட்பணியாளர் கிறிஸ்தபர் லோ OCD, அருட்பணியாளர் கிறிஸ் W.S ஆகியோர் இணைந்து பன் மொழியில் திருப்பலியை நிறைவேற்றினர். இத் திருப்பலியில் மறையுரையாற்றிய குருவானவர்கள் நம்முடைய குடும்ப உறவின் ஆழத்தை புதுப்பித்தல். கிறிஸ்துவின் அன்பில் ஒன்றிணைக்கப்பட்டு ஒரே சகோதரத்துவத்தில் கிறிஸ்துவுடன் இணைந்து நடக்க அழைக்கப்படுகிறோம் என்று வலியுறுத்தினர்.

ஜூன் 20 ஆம் நாள் – சூழலியல் என்ற தலைப்பில் அருட்ப்பணியாளர் ஜோனதன் ராவ் தமிழிலும் ஆங்கிலத்திலும் ஆற்றிய மறையுரையில் சுற்றுச்சுழல் பாதுகாப்பு, இப்பூமியை பசுமையாகப் பேணிகாக்கும் அவசியம் ஆகியவைப் பற்றி பேசினார்.

ஜூன் 21 ஆம் நாள் – பங்கின் பாதுகாவலரான புனித அலோசியஸ் திருவிழா அன்று, அருட்பணியாளர்கள் கிளாரன்ஸ் தேவதாஸ், அல்பட் ஆரோக்கியசாமி, சேவியர் ஆண்ட்ரு, நிக்கலஸ் ஹோ OCD, எட்வின் பீட்டர், மார்டின் தென் CDD, சின் வீ OCD, கிறிஸ் ஆகியோர்களுடன் திருவிழா விமரிசையாகக் கொண்டாடப்பட்டது. அருட்பணியாளர் கிளாரன்ஸ் தேவதாஸ் தனது மறையுரையில் கிறிஸ்துவின் திரு உடல் திரு இரத்தம் பற்றிய மகத்துவத்தை விளக்கினார். நாமும் விசுவாசத்தின் உயிரோட்டமுள்ள மக்களாக திகழ வேண்டும் என்றார் அவர். திருப்பலியினைத் தொடர்ந்து திவ்ய நற்கருணையோடு புனித அலோசியஸ் சுருபம் முதல் முறையாக பவனியாக கொண்டு செல்லப்பட்டது. இது பலருடைய இதயத்தை நெகிழவைத்தது.

ஜூன் 22 நாள் – அருட்ப்பணியாளர் ஞானசெல்வம் அவர்களால் தமிழில் திருவிழா திருப்பலி நிறைவேற்றப்பட்டது. அவர் அருட்பணியாளர் நேடன், பெலி ஹோய் வட்டாரத்தில் வசிக்கும் பூர்வீக குடிமக்களின் இயற்கை வாழ்க்கை முறை பற்றியும், நேற்றும் இன்றும், என்றும் மாறாத கடவுள் மேல் அதே விசுவாசத்தோடு உறுதியாக இருக்கவேண்டும் என்றும் பேசினார்.

அன்றைய நாளில் முக்கியமாக – புனித அலோசியஸ், புனித தெரேசா ஆகிய இரு திருஅவையினரும் இணைந்து “சுற்றுச்சூழல் பாதுகாத்தல் எனும் உறுதிமொழியில் கையெழுத்திட்டனர். இது பாப்பரசர் பிரான்சிஸின் Laudato Si' ஆவணத்தில் அழைத்துள்ள சூழலியல் மனமாற்றத்திற்கான பதிலளிப்பாகும். “இறைவன் நமது பொறுப்பில் ஒப்படைத்த உலகத்தை – நம் பொதுவான இல்லத்தை – நாம் காப்பாற்ற உறுதியளிப்போம்”

பேராயர் ஜூலியன் லியாவ், முன்னால் பேராயர் .மேர்பி பாக்கியம் ஆகியோர் தலைமையில் ஆங்கிலத்தில் கிறிஸ்துவின் திரு உடல் திரு இரத்தம் பெருவிழா திருப்பலி நிறைவேற்றப்பட்டு, திருவிழா நிறைவடைந்தது.

By Selva Manogary, translated by Lucia Alexan

# பொதுக்காலம் 14 ஆம் ஞாயிறு 06-07-2025

எசாயா 66: 10-14 திருப்பாடல்: 66: 1-7, 16-20
கலாத்தியர் 6: 14-18 லூக்கா 10: 1-12,17-20(10:1-9)

## “இந்த வீட்டுக்கு அமைதி உண்டாகுக”

இறைஇயேசுவில் அன்புமிக்க சகோதர சகோதரிகளே, உங்கள் அனைவருக்கும் கிறிஸ்துவின் அமைதி உரித்தாகுக. நாம் பாஸ்கா காலக் கொண்டாட்டங்களிலிருந்து பொதுக்கால ஞாயிறு வாரங்களுக்குள் பயணிக்கிறோம். இன்றைய அனைத்து வாசகங்களும் நமக்கு ஆறுதலும், எதிர்நோக்கும் கொண்ட இறைவசனங்களை உள்ளடக்கியுள்ளன. நம்வாழ்க்கையில் துவண்டுபோகும்போதெல்லாம் நான் உன்னோடு இருக்கிறேன் என்று சொல்லும் உயிருள்ள வார்த்தைகளை தியானிப்போம் வாருங்கள்!

முதல் வாசகத்தில் எசாயா நம் தந்தையாகிய இறைவனின் அன்பை எடுத்துரைக்கிறார். எருசலேம் அவருடைய அன்புக்குரிய பிள்ளை எனவும் செல்வத்தையும், நிறைவாழ்வையும் வழங்குவதாக கூறுகிறார். தந்தையாகிய யாவே கடவுள், தன்னை தாயாக உருவகப்படுத்தி நம்மைத் தேற்றுகிறார். இனி புலம்பல் இல்லை, மகிழ்ச்சியும் அக்களிப்பும் தருவதாகவும், இதனால் ஆண்டவரின் ஆற்றலை தம் மக்கள் காண்பர் என்றும் எடுத்துரைக்கிறார்.

திருப்பாடல் ஆசிரியரும் யாவே தந்த அருளுக்காகவும், ஆற்றிவரும்செயல்களுக்காகவும், அனைத்துலகின் மக்களையும் நோக்கி, கடவுளைப் போற்றி ஆர்ப்பரியுங்கள் என்று பாடுகிறார். எகிப்திலிருந்து விடுதலைப் பெற்ற மக்களாக, கடலைக் கடந்து உலர்ந்த தரையில் நடந்துவந்த மாபெரும் செயலை எண்ணிப் பாடுகிறார். இந்தப் பாடலின் வழியாக, நாம் நன்றியுணர்வை வெளிப்படுத்துவதைப் பார்க்கிறோம்.

இந்த நன்றியுணர்வின் தொடர்ச்சியாக திருத்தூதர் பவுல், இயேசுகிறிஸ்துவின் சிலுவையைத் தவிர வேறெதைப் பற்றியும் பெருமை பாராட்டமாட்டேன் என்று கூறுகிறார். பழைய வாழ்க்கையிலிருந்து புதிய படைப்பாக, இயேவுக்காக வாழ்வதும் அவரைப் பின்பற்றுவதுமே இன்றியமையாதது என்று அறிவிக்கிறார்.

இவை அனைத்தும் எப்போது நிகழும்? யாரேனும் ஆண்டவரைப் பற்றி நற்செய்தியை எடுத்துரைத்தால் மட்டுமே நிகழும். யாரும் அறிவிக்காவிடில் எங்ஙனம் நற்செய்தி பிறரைச் சென்றடையும்?

இயேசு தாம் பயிற்றுவித்த சீடர்களை இருவர் இருவராக அனுப்புகிறார். அனைவரிடத்திலும் நற்செய்தியைக் கொண்டு சேர்க்க வேண்டும் என்பதே அவரது நோக்கமாகும். அதனால் தான் காலத்தை வீணாக்காமல், எவருக்கும் வணக்கம் செலுத்த தேவையின்றி, உங்கள்பணியை உடனே செய்யுங்கள் என்று அனுப்புகிறார். எழுபது அல்லது எழுபத்திரண்டு என்ற எண், தொடக்கநூலில் வெள்ளப்பெருக்கிற்குப்பின் நோவா புதல்வரின் வழிவந்த இனவாரியான தலைமுறைகள் என்று காணலாம். அதேபோல மோசேக்கு கடவுள் அறிவுரை கூறியபோது இஸ்ரயேல் மூப்பரில் எழுபதுபேரை ஆண்டவரித்தில் கூட்டிவந்தார்.(வி.ப:24:9) மோசேக்குத் துணையாக 72 பேரை ஆண்டவர் நியமித்தார் என்றும் வாசிக்கின்றோம். இயேசுவும் அதன் தொடர்ச்சியாக 72 பேரை தம்முடைய பணிக்கென தேர்ந்தெடுத்து அனுப்புகிறார்.

- ஆண்டவரின் நற்செய்திப் பணி எனக்கும் தரப்பட்டுள்ளது – நான் அதற்கு மறுப்பேதும் சொல்லாமல் ஏற்றுக்கொள்கிறேனா?
- வணக்கம் செலுத்த வேண்டாம். – இதிலிருக்கும் உள்நோக்கம் – ஆண்டவரின் பணியில் தாமதமோ சோம்பலோ இருத்தலாகாது.
- அமைதி – இறைசெய்தி அறிவிப்பதன் முதல்முழு நோக்கம் – கிறிஸ்துவின் அமைதி அனைவரிடத்திலும் சென்று சேரவேண்டும். நாம் ஒவ்வொருவரும் திருத்தூதராக, நற்செய்தியை அறிவிப்பவராக, வார்த்தையால் மட்டுமல்ல, நம் வாழ்வாலும் காட்டவேண்டும். வார்த்தையைவிட செயலே ஆற்றல்வாய்ந்தது.